mentioned by the then Government that this enactment was a temporary measure and that it will be removed. On the other hand it has come to stay permenently in the statute book year after year. The incidents and rates of taxes have been increased. Compounding rates have been enormously increased and every crop is taxed as commercial crop. A owner of a land is taxed doubly. As owner of the land he is asked to pay tax i.e. Kist, water charges, betterment levy etc. and then for the income derived from the land he is to pay tax also, Is this fair?

This association has represented to the Committee the hardships and difficulties of the farmers and agriculturists and it fervently requests to consider them and do maximum best for redress of the grievances.

இணைப்பு X

[515ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 81-க்கான விடையைக் காண்க]

தேசிய கூட்டுறவுக் கொள்கைத் தீர்மானம்—செயல் திட்டங்கள்:

பிரிவு 1: பொருளாதார வளர்ச்சி பரவலாக அமையவும், தொழிலாளர் மேம்பாட்டையும், கிராமப்புற வளர்ச்சியினையும் நோக்கமாக கொண்டு பாடுபடுகிற பெரும் அமைப்புகளில் ஒன்றாக கூட்டுறவுச் சங்கங்கள் வளர்க்கப்படவேண்டும்.

செயல் திட்டம்:

1. பொருளாதார வளர்ச்சியைக் கூட்டுறவு இயக்கம் மூலமாகப் பரவலாக்க வேண்டுமென்பது மத்திய அரசு அளவிலும் மாநில அரசு அளவிலும் அமையும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு திட்டவட்டமான செயல் திறமாக விளக்கப் படவேண்டும்.

2. தேசிய அளவிலும் மாநில அளவிலும் ஒரு கூட்டுறவுத் துணைத் திட்டம் உருவாக்கப்படவேண்டும், அத்துணைத் திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டப் பணிகளின் கீழ் வரையறுக்கப் பட்ட மூலதன ஒதுக்கீடுகள், திட்ட, நிதி நிலை இலக்குகள், திட்டவட்டமான கொள்கை முன்னுரிமைகள் ஆகியவை பற்றி குறிப்பிட வேண்டும்:—

(அ) குறுகிய கால, மத்தியகால, நீண்ட விவசாயக் கடன்கள் மற்றும் சிறுதொழில் புரிவோர்க்கும் கிராமக் கைவினைஞர் களுக்கும் கடன்கள்.

[1979 அக்டோபர் 31

(ஆ) விவசாய பயிரிடு பொருட்கள் வழங்கல், விவசாய விளை பொருட்களின் விற்பனை, அவற்றைப் பக்குவப் படுத்துதல் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் நுகர் பொருட்கள் வினியோகம்.

(இ) பால் பண்ணை, கோழிப் பண்ணை, மீன் வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, பழங்குடியினர் மேம்பாடு முதலிய கிராம வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்ட கூட்டுறவுப் பொருளாதாரத் திட்டங்கள்.

(ஈ) வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்பு, மிகச்சிறு விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் மேம்பாட்டுத் திட்டம், முதலிய ஊர் வளர்ச்சித் துறைகளிடமிருந்து நிதியும் இதர உதவியும் பெறும் கூட்டுறவுத் திட்டங்கள்.

(உ) கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இந்தியத் தொலை பேசித் தொழில், தபால்-தந்தி, இரயில்வே, நிலக்கரிச் சுரங்கம், உருக்குத் தயாரிப்புத் தொழில்கள் முதலிய பெரும் தொழிற் சாலைகளுடன் இணைந்த துணைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

(ஊ) பொதுப்பணித்துறை மற்றும் பிற துறைகள், பாசனம் மற்றும் நீர்மின்சாரத் திட்டங்கள் முதலியவற்றின் கட்டுமானப் பணிகள்.

(எ) கூட்டுறவு வீட்டு வசதி.

பிரிவு 2—

பொருளாதார வளர்ச்சி, சமூக மாறுபாடு ஆகியவற்றுக்கான திட்டங்களை வகுப்பதில் எல்லா நிலைகளிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்யவேண்டும்.

செயல் திட்டம்

3. தேசிய அளவில், தேசியக் கூட்டுறவு இணையங்கள் அனைத்தும், அதனைச் சார்ந்த துறைகளுக்கான நிறுவன வளர்ச்சித் திட்டங்களை வகுக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன. அவ்வாறு வகுக்கப்படும் திட்டங்கள், மத்திய அரசாலும் மாநில அரசாலும் தயாரிக்கப்படும் திட்டங்களுடன் இணைந்த துணைத் திட்டங்களாக அமையும், அவை அடுத்த இடைக்காலத் திட்டத்தில் (1978–83) சேர்த்துக் கொள்ளப்படும். அவ்வகை நிறுவன வளர்ச்சித் திட்டங்கள், கீழ்க் கண்டவற்றைப் பற்றியதாகும்:—

(அ) சொந்த நிதி வசதிகளைத் திரட்டுதல்.

(ஆ) நோக்கங்களையும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளையும் எய்தத் தேவையான, அடிப்படை மற்றும் அமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்தல்; மேலும்

1979 அக்டோபர் 31]

(இ) பணியாளர் தேவைகள், (நிர்வாக, தொழில் நுட்ப பயிற்சி பெற்ற, பயிற்சி பெற்றிராத) பணியாளர்களின் தேர்வு, பயிற்சி, பணியிலமர்த்தல் உள்ளிட்ட ஆள் திறன் மேம்பாட்டுத் திட்டம்.

பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதில், பல்வேறு நிலைகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களைப் பங்கு கொள்ளச் செய்ய, மாநில/மாவட்ட அளவுகளிலும் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

4. கூட்டுறவுச் சங்கங்கள் தம் சொந்த நிதி வசதிகளையும், திட்ட ஒதுக்கீடுகளையும் எவ்வளவிற்குப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன என்று மதிப்பிட்டு அதன் அடிப்படையில் 1979–80 ஆம் ஆண்டுக்கான திட்டம் அமைக்கப்படவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களே இந்த மதிப்பீடுகளைத் தயாரிக்கவேண்டும். மாநில அளவில் அவற்றை ஒருங்கிணைத்து ஆண்டுத்திட்டங்களில் சேர்க்கவேண்டும்.

5. கூட்டுறவுப் பணிகளில் சமூக ரீதியான திட்டப் பணிகளைக் கண்டறிந்து கீழ்க்கண்டவை போன்ற துறைகளில், அவற்றை விழிப்புடன் மேம்படுத்த வேண்டும்:—

(அ) அமைப்பு, தொழில் முனைவு, முடிவு எடுப்பதில் பகுத்தறியும் தன்மை போன்ற சமுதாயத் திறமையை வளர்த்தல், தொழிற்நுட்ப பணிகளை ஒருங்கிணைக்கும் திறனை வளர்த்தல் தடைகளையும் பரம்பரை மூடப் பழக்கங்களையும் ஒழித்தல், மற்றும் நவீன முன்னேற்றக் கண்ணோட்டத்தை வளர்த்தல்.

(ஆ) கல்வியைப் பரப்புதல்.

(இ) மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலன்.

(ஈ) இளைஞர்களிடையே ஆக்க பூர்வமான தலைமைப் பொறுப்பேற்று நடத்தும் திறமையை வளர்த்தல்.

(உ) சமூக, பொருளாதார வாழ்க்கையில் மகளிரின் நிலையை உயர்த்துதல்.

(ஊ) நூலக இயக்கத்தைப் பரப்புதல்.

(எ) பண்பாட்டுப் பணிகளை மேம்படுத்துதல்,

(ஏ) வெவ்வேறு வளர்ச்சிப்பகுதிகளில், ஊராட்சி நிறுவனங்களுடனும், சமுதாய வளர்ச்சி அமைப்புகளுடனும் ஒத்துழைத்தலும் ஒருங்கிணைந்து செயலாற்றுதலும்.

பிரிவு 3—

கூட்டுறவு இயக்கம் ''ஏழைகளுக்கு ஒரு கேடயமாக'' மேம்படுத்தப்படவேண்டும். சிறு உழவர்கள், மிகச் சிறு உழவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள், நடுத்தர மற்றும் குறைந்த அளவு வருமானத்தை உடைய எளிய மக்கள் ஆகியோர், கூட்டுறவுத் திட்டப் பணிகளில் பங்குபெற அதிக வாய்ப்புகள் ஏற்படுத்திக்

கொடுக்க வேண்டும். இலட்சக்கணக்கான நம் மக்கள் கூட்டுறவு இயக்கத்தில் பங்கு பெறுவதற்கான பெருமுயற்சியும் மேற்கொள்ளப்படவேண்டும்.

செயல் திட்டம்: 6—

சிறு உழவர்கள், மிகச்சிறு உழவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள், குறைந்த அளவு வருமானத்தை உடைய மற்றும் நடுத்தர அளவு வருமானத்தை உடையவர்களில் குறைந்த அளவு வருமானம் உடைய எளிய மக்கள் ஆகியோர் கூட்டுறவுத் திட்டப் பணிகளில் முழு அளவில் ஈடுபட அதிக வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது மிக அவசியம். கூட்டுறவுச் சங்கங்களில் பங்குகள் வாங்குவதற்கு, அவர்களுக்குத் தேவையாகும் சிறு கடன்கள் வழங்கலாம். இவ்வகையினை சேர்ந்தோர்க்கு பங்குத்தொகை சிறிய அளவில் இருப்பதோடு, தவணைகளில் செலுத்தக்கூடிய தாவும் இருக்கவேண்டும். சிறு உழவர்கள், மிகச்சிறு உழவர்கள் விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள் ஆகியோரை தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வதில் உள்ள ஏனைய பிரச்சனைகளும் தடங்கல்களும் அகற்றப்படவேண்டும்; அத்தகைய உறுப்பினர்கள், தங்களது கருத்துக்களைத் தாராளமாக எடுத்துரைக்கவும், தாம் உறுப்பினராயுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஜனநாயகப் பணிகளில் கலந்து கொள்ளவும், கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்களுக்கு செய்து கொடுக்கும் எல்லா வசதிகளையும், தாமும் பயன்படுத்திக் கொள்ளவும் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

7. கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தகுதியுள்ள எவரும் விண்ணப்பம் செய்து உறுப்பினராகலாம் என்று ஐந்து மாநிலங்களின் கூட்டுறவுச் சங்கச் சட்டங்களில் வழி செய்யப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களும் தமது கூட்டுறவுச் சங்கச் சட்டங்களில் அத்தகையதொரு விதியைச் சேர்க்கவேண்டும்.

8. எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் தாம் செய்து கொடுக்கின்ற வசதிகளில்/ஆற்றுகின்ற பணிகளில் பொருத்தமானதொரு விகிதாச்சாரத்தை சமுதாயத்தின் நலிந்த பிரிவினைரைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கென ஒதுக்கவேண்டும்.

9. எல்லா நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் துணை விதிகளும் நுகர்வோர்கள் யாவரும் அங்கத்தினர்களாகச் சேர்வதற்கும், அவர்கள் யாவரும் பொதுக்குழுக்கூட்டங்களிலும், பொதுக்குழுக் கூட்டத்திற்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க அவ்வப் பகுதிகளில் நடத்தப்படும் கூட்டங்களிலும் வாக்களிக்கும் உரிமைக்கும் வகை செய்ய வேண்டும்.

1979 அக்டோபர் 31]

10. ஆண்டு அறிக்கை நிதி நிலை அறிக்கைகள் ஆகியவற்றைப் பற்றியும், பொதுவாக பொதுக்குழுக் கூட்டங்களில் பரிசீலிக்கப் படுகின்ற ஏனைய விவகாரங்களைப் பற்றியும் விவாதிப்பதற்காக, அவ்வப்பகுதிகளில் நடைபெறும் கூட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

11. கூட்டுறவுச் சங்கச் சட்டங்களின்படி, எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுக் கூட்டங்களும், குறைந்தது ஆண்டுக்கொரு முறையேனும் தவறாது நடத்தப்படவேண்டும்.

12. அதிக உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுறவுச் சங்கங் களைப் பொறுத்த வரையில், பிரதிநிதிகளைக் கொண்டு பொதுக் குழுக் கூட்டம் நடத்தும் முறை ஒன்றைக் கொண்டு வர வேண்டும். இக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக (பகுதி அல்லது கிளை வாரியாக) அவ்வப் பகுதிக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். இக்கூட்டங்களில், உறுப்பினர்கள், பொதுக்குழுக் கூட்டத்திற்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதுடன், பொது வாக பொதுக்குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படும் பணிபற்றிய அறிக்கைகள், நிதிநிலை அறிக்கைகள். மற்றும் பிற விவகாரங்கள் பற்றி விவாதிக்க வேண்டும்.

பிரிவு 4 —

கூட்டுறவு வளர்ச்சி தேசிய அளவில் ஊக்குவிக்கப்பட்டு, வட்டாரத்திற்கு வட்டாரம் கூட்டுறவு வளர்ச்சியில் காணப் படுகின்ற ஏற்றத் தாழ்வுகள் படிப்படியாக அகற்றப்பட வேண்டும்.

செயல்திட்டம் 13— சில மாநிலங்களில் அல்லது மாநிலத்தின்சில பகுதிகளில் பல்வேறு துறைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய வளர்ச்சி அடையாமலிருப்பதற்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டும்.

14. இவ்வியக்கத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பன வற்றை அகற்ற நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

15. பின்தங்கிய பகுதிகளுக்கென தனித் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்; ஏற்கெனவே அவ்வாறு வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்ற அத்தகைய திட்டங்களை மதிப் பீடு செய்ய வேண்டும்.

16. தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் தேசிய கூட்டுறவு இணையங்களும் தங்கள் அமைப்பை பலப்படுத்தி, பின் தங்கிய பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கத் தமது பணிகளை முழுமுரப்படுத்தவேண்டும்.

17. மத்திய குழுக்கள், பல்வேறு மாநிலங்களிலும் முறை யான ஆய்வுப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்து, தம் பரிவுரைகள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க வேண்டும்.

18. முன்னேற்ற மடைந்த மாநிலங்களில் உள்ள கூட்டுறவு இயக்கம், பின் தங்கிய மாநிலங்களில் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கு முறையான திட்டங்களை வகுக்க வேண்டும்.

பிரிவு 5—

கூட்டுறவு இயக்கம், தன்னாட்சி உரிமை பெற்ற, சுயசார்புள்ள இயக்கமாகவும், வெளியாரின் அவசியமற்ற தலையீடோ அல்லது அளவு மீறிய கட்டுப்பாடோ இல்லாமலும், அரசியலிலிருந்து விலகியும் வளர்க்கப்பட வேண்டும், சொந்த நிதி வசதிகளைப் பெருக்குதல், கிராமப்புறங்களிலும், நகரங்களிலும் சேமிப்புக்களைத் திரட்டுதல், நிதி வசதிகளுக்காகப் பிற நிதியுதவி நிறுவனங்களையும் அரசையும் நம்பியிருப்பதைக் குறைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில், கூட்டுறவுச் சங்கங்களின் தன்னாட்சி உரிமை அமைந்திருக்க வேண்டும்.

செயல்திட்டம் 19.— மத்திய அரசால் 1976 மேதிங்களில், சுற்றறிக்கை மூலமாக அனுப்பப்பட்ட வழிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கூட்டுறவு சட்டத்தில் உள்ள கட்டுப்படுத்த வல்ல எல்லா அம்சங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். கூட்டுறவுச் சட்டத்தில் உள்ளவையும் முறையற்ற வகையில் கட்டுப்படுத்துபவையாகக் குறிப்பிடப்படுபவையுமான விதிமுறைகள் கீழ்க்கண்டவை பற்றியனவாகும்;—

(1) சங்கத்தின் துணை விதிகளைப் பதிவாளர் கட்டாயமாகத் திருத்துதல்.

(2) பதிவாளர், சங்கங்களைக் கட்டாயமாகப் பிரித்தல்.

(3) சங்கத்தின் நிர்வாகக்குழுவில் இயக்குநர்களை நியமனம் செய்ய அரசுக்கு அதிகாரம்.

(4) தீர்மானங்களை ரத்து செய்ய அல்லது நடைமுறையிலிருந்து நீக்க பதிவாளருக்கு மாநில அரசுக்கு, அதிகாரம்.

(5) தீர்மானங்களை நிராகரிக்க நிர்வாகக் குழுவிலுள்ள அரசு நியமனதார்களுக்கு அதிகாரம்.

(6) கட்டளைகள் பிறப்பிக்க பதிவாளருக்கு/மாநில அரசுக்கு அதிகாரம்.

(7) சங்கங்களின் நிர்வாகக் குழுவைக் கலைத்தல்/தற்காலிகமாக நீக்கிவிடுதல்.

(8) கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நிர்வாகக் குழு தானாகவே கலைத்தல்.

(9) நிர்வாகக்குழுவின் பதவிக் காலத்தின் மீது கட்டுப்பாடு.

(10) ஒரே சமயத்தில் பல கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் பதவி வகிப்பதற்குக் கட்டுப்பாடு.

1979 அக்டோபர் 31]

20. கிராமப்புறங்களிலும், நகர்புறங்களிலும் உள்ள கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பரந்த அளவில் சேமிப்புகளைத் திரட்டவேண்டும். நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிமுறை தீவிரமாக வளர்க்கப்படவேண்டும்.

21. விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள், பதப்படுத்தும் கூட்டுறவுச் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அதிக நிதி வசதியினைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். அப்போது தான் அவை நாளடைவில் சுய சார்புள்ளவையாக விளங்க முடியும்.

22. எல்லா கூட்டுறவு நிறுவனங்களும் மனித சக்தியை மேம் படுத்துவது குறித்து திட்டவட்டமான ஒரு கொள்கையை வகுத்து அதனை நிறைவேற்ற வேண்டும்.

23. பல்வேறு துறைகளில் வல்லுநர்களாக விளங்குபவர்களும், தேவையான அனுபவமும் பின்னணியும் உள்ள அதிகாரிகளும்தான் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் அரசுப் பிரதிநிதி களாக நியமிக்கப்படவேண்டும்.

பிரிவு 6—

கூட்டுறவுச் சங்கங்களில் சுயநலவாதிகளின் ஆதிக்கமில்லாமல் பரந்த அளவில் தெளிவு பெற்ற அனைவரும் உறுப்பினராக பங்கு கொள்ளும் வகையில் துடிப்புள்ள கூட்டுறவு ஜனநாயகம் உருவாக்கப்படவேண்டும்.

செயல்திட்டம் 24.—இந்தியாவில் உள்ள கிராம மக்களில் அநேக மாக 75 சதவீதத்தினர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்ற காரணத்தால், சுயநலவாதிகளின் ஆதிக்கமில்லாமல் துடிப்புள்ள ஒரு கூட்டுறவு ஜனநாயகத்தை உருவாக்க வேண்டு மானால், பரந்த அளவில் தெளிவு பெற்ற அனைவரும் உறுப் பினராக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். உறுப் பினர் கல்விக்கான பெரும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும், இத்திட்டத்தின் பணிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும். இத்திட்டத்தில்தான் கூட்டுறவுச் சங்கங்களின் திட்டங்களிலும் நிர்வாகத்திலும் பங்கேற்கும் வகையில் தெளிவுபெற்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் நோக்கத்தை எய்த முடியும்.

25. கூட்டுறவு இயக்கத்தில் ஆக்கபூர்வமான தலைமையை உருவாக்கவும் அதற்குப் பயிற்சியளிக்கவும் பயனுள்ள திட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

பிரிவு 7—

கூட்டுறவு இயக்கத்தின் நற்பெயரை மாசுப்டுத்தி, அவ்வியக்கம் எந்த கொள்கைகளுக்காக இருக்கின்றதோ அந்த கொள்கைகளுக்கே ஊறுவிளைவிக்கின்ற இலஞ்ச ஊழலையும் முறைகேடுகளையும் களைந்து இயக்கத்தை தூய்மை படுத்த வேண்டும்.

செயல்திட்டம் 26.—கூட்டுறவுச் சங்கங்களை உரிய காலத்தில் தணிக்கை செய்யவும், ஆய்வு செய்யவும் உள்ள ஏற்பாடுகளை வலிவுபடுத்த வேண்டும்.

27. கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் ஊழல், முறைகேடுகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்த மாநிலக் கூட்டுறவுத்துறைகளிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். ஊழல் செய்யும் குற்றவாளிகள் மீது தக்க சமயத்தில் நடவடிக்கை எடுக்க இதனால் இயலும்.

28. நிதிகளைக் கையாடல் செய்தல், நிதிகளைத் தவறான முறையில் பயன்படுத்துதல் போன்றவற்றைச் செய்யும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்க வேண்டும்.

29. கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் முறைகேடுகளையும் ஊழல்களையும் கண்டறிவதற்காக ''செய்ய வேண்டியவை எவை எவை'' ''செய்யக் கூடாதவை எவை எவை'' என்று குறிப்பிட்டு அவற்றைப் பரந்த அளவில் விளம்பரப்படுத்த வேண்டும்.

பிரிவு 8—

கிராமங்கள் முழுமையாகவும், விரிவாகவும் வளர்ச்சி அடையும் பொருட்டு, கடன் வழங்குதல், விவசாயப் பயிரிடு பொருட்கள், வழங்குதல், பால்பண்ணை, கோழிப்பண்ணை, மீன் வளர்த்தல், பன்றி வளர்த்தல் போன்ற துணைக்காரியங்களை உள்ளிட்ட விவசாய உற்பத்தி, விற்பனை, இன்றியமையா நுகர் பொருட்களை வழங்குதல் ஆகியவற்றிற்கு இடையேயுள்ள தொடர்புகளைப் படிப்படியாக வலுப்படுத்துவதன் மூலம், கிராமப்பகுதிகளில் வலிமையான தனித்தியங்கக்கூடிய, ஒருங்கிணைந்த கூட்டுறவு முறையை உருவாக்க வேண்டும்.

செயல்திட்டம் 30.—கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் பிற வகைக் கூட்டுறவுச் சங்கங்களையும் திருத்தியமைக்கும் பணி இரண்டாண்டுகளுக்குள் முடிக்கப்படவேண்டும்.

31. ஒருங்கிணைந்த கூட்டுறவு முறையில் உள்ள தொடர்களில் அதாவது, கடனுக்கும் விற்பனைக்கும் இடையேயும், கடனுக்கும் பயிரிடு பொருள் வழங்குவதற்கும் இடையேயும். கடனுக்கும் இதர செயல்களுக்கும் இடையேயும் உள்ள தொடர்களில் வலுக் குறைந்தவைகளை வலுப்படுத்தவேண்டும்.

32. கூட்டுறவு இயக்கத்தில் ஒவ்வொரு பிரிவிலும் தலைமைச் சங்கத்திலிருந்து தொடக்கச் சங்கம் வரையில் ஒரு முழுமையான பயனுள்ள ஒருங்கிணைப்பை உருவாக்கவேண்டும்.

33. சமநிலையில் இருக்கக்கூடிய பல்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றை ஒன்று நன்கு புரிந்துகொண்டு முடிந்தால் அவை கூட்டாகச் செயல்பட ஒப்புக்கொண்ட திட்டத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்படவேண்டும்.

1979 அக்டோபர் 31]

34. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொதுத்துறை அமைப்புகளுக்கும் இடையே அவற்றின் சொந்த நன்மைக்காவும் அதன் மூலம் முடிவில் பொதுமக்களின் நலனுக்காகவும் பயனுள்ள தொடர்பு உருவாக்கப்படவேண்டும்.

35. சிறு உழவர்கள், மிகச்சிறு உழவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த, பால்பண்ணை, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு முதலிய துணைத் தொழில்கள் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தப்படவேண்டும். மேற்படி துணைத் தொழில்கள் அவர்களுக்குத் தேவையான கால்நடைத் தீவனம் போன்ற இருபொருள்களை வழங்கும். அத்துடன் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்யவும் அவை ஏற்பாடு செய்யும்.

பிரிவு: 9

பயிர் செய்வோருக்கும், நுகர்வோருக்கும் இடையே பயனுள்ள வகையிலும் பொருளாதார ரீதியிலும் தொடர்பு இருப்பதற்கேற்றவாறு, கூட்டுறவு விவசாயப் பொருள் பதப்படுத்தும் மற்றும் தொழிற் பிரிவுகள் ஏராளமாக உருவாக்கப்படவேண்டும்.

செயல்திட்டம்: 36.—உற்பத்தியாளர்கள் முழுப்பலனைப்பெறுவதற்காக, பல்வேறு மாநிலங்களில், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் போன்று வளர்ச்சியடைவதற்கு வாய்ப்புள்ள பகுதிகள் அனைத்தையும் கண்டறிந்து, விற்பனையையும் பதப்படுத்தலையும் ஒருங்கிணைக்கும் திட்டம் ஒன்றை வகுத்து மேற்படி பகுதிகளில் செயல்படுத்த வேண்டும்.

37. உற்பத்தியாளரும் நுகர்வோரும் நன்மை பெறும் பொருட்டு' கூட்டுறவு விவசாயப் பொருள் பதப்படுத்தும் மற்றும் பிற தொழில் பிரிவுகளுக்கும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம், இடைத் தரகர்களை அல்லது இடை வணிகர்களைக் கூடுமான வரை நீக்கிவிடவேண்டும்.

பிரிவு: 10

பொது விநியோக முறையை வலுப்படுத்துவதற்காகவும், நுகர்வோர் பாதுகாப்பு அரணாகவும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் சாதனமாகவும் செயல்பட நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் வளர்க்கப்படவேண்டும்.

செயல்திட்டம்: 38.—நகர்புறப் பகுதிகளிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் கிராமப்புறப் பகுதிகளிலுள்ள விவசாய தொடக்க கூட்டுறவுச் சங்கங்களும் மக்கள் அதிகமாக பயன்படுத்தக்கூடிய இன்றியமையாப் பொருட்கள் விநியோகம் செய்யும் பணியை மேற்கொண்டு, எல்லா மாநிலங்களிலும் கொண்டு வர இருக்கும் புதிய உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும், புதிய நியாய விலைக்

கடைகளைத் திறக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். உணவு பங்கீட்டு அட்டைகளுக்கு வழங்கப்படும் பொருட்கள் அன்றி அதிக அளவில் பயன்படுத்தப் படும் இதர இன்றியமையாப் பொருட்களையும் விற்க கூட்டுறவுத் துறையிலுள்ள நியாயவிலைக் கடைகள் அனுமதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவை தனித்தியங்க வல்ல நிறுவனங் களாக ஆக முடியும்.

பிரிவு:11

கூட்டுறவுச் சங்கங்கள் சீரிய அமைப்பையும், எளிய நியாய மான நடைமுறைகளையும் கொண்ட திறமையான நிறுவனங் களாக வளர்க்கப்படவேண்டும்.

செயல்திட்டம்:39. காலதாமதம் ஆவதற்கான நடைமுறைகளைக் கண்டறிந்து அவற்றைத் திருத்துவதற்கான வழிவகைகளைத் தெரிவிப்பதற்காக, கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் இணையங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக் கான அமைப்பு முறை, வழிமுறைகள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டும்.

பிரிவு:12

தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு முறை யாகப் பயிற்சி அளிக்கும் ஒரு நிலையான திட்டத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களில் தொழில் நுணுக்கமறிந்த நிர்வாகம் உருவாக்கப்படவேண்டும்.

செயல்திட்டம்:40.—கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடர்பாக மனித சக்தியின் தேவை மற்றும் வளர்ச்சி பற்றிய ஆய்வு ஒன்று உணவு—விவசாய அமைப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்டுள்ளது. இவை போன்ற ஆய்வுகளைத் தேசிய மாநில இணையங்கள் தங்கள் பிரிவுகள் குறித்து மேற் கொள்ள வேண்டும்.

41. கூட்டுறவு இயக்கத்தின் ஒவ்வொரு துறையிலும் எந்த அளவுக்குப் பயிற்சி தேவைப்படுகிறது என்பதை மதிப்பிட்டு இன்னும் கூடுதலான கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளும், இள நிலைக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட வேண்டும். தற்போதுள்ள, மற்றும்புதிதாகத்தொடங்கப்படக்கூடிய கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் இளநிலை கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்கும், பயனுள்ள பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு நல்ல வசதிகள் செய்து கொடுக்கப் படவேண்டும்.

42. கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களின் பயிற்சித் திறனையும் அந்நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களையும் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு மாநிலக் கூட்டுறவுத் துறைகளும் பயனடையும் கூட்டுறவு நிறுவனங்களும் ஆவன செய்ய வேண்டும்.